**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**

**<u>O.S.No. 150/2024</u>**

25.03.2026 பி.வா.சா.2 திரு. முருகன்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு நிருபண வாக்குமூலத்தில் வாதி, பிரதிவாதிகளை நன்கு தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தங்கம்மாள் என்பவரை தெரியும் என்று நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தங்கம்மாள், கணேசன் அவர்களுக்கு என்ன உறவு முறை என்றால் அத்தை உறவு முறை. தங்கம்மாள், 2016ம் ஆண்டு கணேசன் அவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்ட்டதாக சொல்லப்படும் உயில் ஆவணத்தில் நான் தான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான்.
2. பிவாசாஆ 8 பதிவு செய்யப்பட்ட போது தங்கம்மாளுக்கு என்ன வயது இருக்கும் என்றால் வயது தெரியாது வயதான பாட்டி. வயதான பாட்டிக்கு சுமார் 90 வயது இருக்குமா என்றால் 80 வயது இருக்கும். தங்கம்மாள் கிரைய பத்திரம் பிறப்பித்து கொடுக்கப்பட்ட காலகட்டத்தில் வாதி, 1-ம் பிரதிவாதி, 1-ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்களின் பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல.
3. எனது நிருபண வாக்குமூலத்தில் தங்கம்மாளுக்கு ரூ 5,00,000 கிரைய தொகை 1-ம் பிரதிவாதி கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள ரூ 5,00,000 கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தங்கம்மாளுக்கு ரூ.5,00,000 தேவைப்படும் அளவிற்கு அவருக்கு எந்த தேவையும் கிடையாது என்றும் தங்கம்மாளை ஏமாற்றி 1-ம் பிரதிவாதி

கிரைய பத்திரத்தில் ரூ5,00,000 கொடுத்ததாக தெரிவித்து எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

4. 1–ம் பிரதிவாதியின் தவறான செயலுக்கு நான் உடந்தையாக இருந்து சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணம் எழுதும் சமயத்தில் தங்கம்மாள் நல்ல மனநிலை மற்றும் உடல்நிலையில் இருந்து வந்தார் என்று தெரிவித்து இருப்பது வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
5. தங்கம்மாள் அவர்களுக்கு படிப்பறிவு கிடையாது என்பதாலும் அவரது வயது முதிர்வின் காரணமாக அவரது இயலாமையை பயன்படுத்தி மோசடியாக கிரைய பத்திரம் 1–ம் பிரதிவாதி எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துகளின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை, விஸ்தீரணம் தெரியாது.
6. கிரைய ஆவணத்தில் தங்கம்மாள் இடது கைவிரல் ரேகை வைத்ததை நானும், 1–ம் பிரதிவாதியும் பார்த்தாகவும், சாட்சிகளாகிய நாங்கள் கையெழுத்து செய்ததை அவர்கள் பார்த்ததாகவும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லி இருப்பது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. தங்கம்மாள் அவர்களுக்கு மேற்படி கிரைய பத்திரத்தில் என்ன எழுதி இருந்தது என்று தெரியாமலே கிரைய பத்திரம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி கிரைய பத்திரம் செல்லக் கூடியதில்லை என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 25.03.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.25 17:09:20 +0530

Principal District Munsif,
Tirunelveli.